மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள்..

திரு. பரிதி இளம்வழுதி : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப நான் அனுமதிக்கவில்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது பற்றி நீங்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை; என் அறையில் வந்தும் கேட்கவில்லை.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவரவர்களே, நான் தகுந்த ஆதாரத்துடன்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புகிறேன். என்னிடம் போட்டோ, மற்ற தகவல்களை எல்லாம் வைத்திருக் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னிடம் அதைக் காட்டவும் இல்லை; அனுமதி கேட்கவும் இல்லை.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே தங்களிடம் இது பற்றித் தெரிவித்திருக்கிறேன். இன்றைக்கும் தங்கள் அறையில் வந்து சொன்னேன் ஆகவே நான் சொல்வதைக் கேட்டுவிட்டு நீங்கள் தீர்ப்பளியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னிடம் தெரிவிக்கவில்லை; என்னுடைய அனுமதியைப் பெறவில்லை. தயவு செய்து நீங்கள் அமருங்கள்.

திரு. செ. ஆறுமுகம் : உங்களுடைய அறையில் வந்து தெரிவிக்காவிட்டாலும் இப்போது அவையில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கலாம். முறையாக இருந்தால் நீங்கள் அனு மதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுபற்றி பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்பது எனக்குத் தெரியவேண்டும். (குறுக்கீடு) நான் நடைமுறைகளைப் பற்றிச் சொல்லுகின்றபோது ஒரு உறுப்பினருக்காக மற்றொருவர் பேசுவது முறையல்ல. அவர் எது பற்றி ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிறார் என்று என்னிடம் தெரிவிக்கவில்லை; என் அனுமதியையும் பெறவில்லை. ஆகவே. மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து அமர வேண்டும். (குறுக்கீடு).

1986 நவம்பர் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதி அவர்கள் எழுப்புகிற பிரச்சனையை முறைப் படி பேரவைத் தலைவரிடம் தெரிவித்து, அனுமதி பெற் றிருந்தால் அதற்கு உரிய பதிலைப் பெறுவதற்கு வசதியாக இருக்கும். நான் கருதுவது சரியாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூற விரும்புகின்ற பிரச்சனையை நானும் பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் அதற்கான விளக்கத்தை நேரடியாகப் பெற முடியவில்லை. அவர்கள் முன் கூட்டியே தெரிவித்தால், பேரவைத் தலைவர் மூலம் நாங்கள் தெரிந்து கொண்டு, உரிய பதிலைப் பெற்றுத்தர முடியும். ஆகவே, அவர்கள் முறைப்படி எழுத்துமூலமாக அது பற்றித் தெரிவிப்பது நல்லது. எழுத்து மூலம் தெரிவித்தால் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம் மிலிட்டரி ஏரியாவா நம்முடைய ஏரியாவா, மிலிட்டரிக்கு என்ன உரிமை இருக்கிறது, நமக்கு என்ன உரிமை இருக்கிறது என்கிற விவரங்களை எல்லாம் அறிந்து இந்த அவைக்குச் சரியான தகவலைத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

அது பற்றி பத்திரிகையில்தான் நான் பார்த்தேன். அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பும் போது கூட அந்தப் பிரச்சனை எனக்குப் புரியாமல்தான் இருந்தது; தெரியாமல் இருந்தது. செய்தித் தாளில் பார்த்த பிறகு அப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்பதை நானே புரிந்து கொண்டேன். எனவே நாங்களே தெளிவு அடைய வேண்டும், அதற்குப் பயன் படுகிற அளவுக்கு எழுதிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள் கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

மூளைக்காய்ச்சல் நோய் பரவியிருத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ. செம்மலை, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், வி. பி. சிந்தன், சைதை சா. துரைசாமி, எஸ். சிவராமன், சு. சிவராஜ், குமரி அனந்தன், சு. பாலன், இரா. தாமரைக்கனி, கே. எம். தங்க மணி, கு. ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, மா. சுந்தரதாஸ், டாக்டர் ந. மாசிலாமணி, திரு. கி. வெங்கடாசலம் டாக்டர் க. நல்லமுத்து, திருவாளர்கள் ஜே. முகம்மது கனி, பரிதி இளம் வழுதி, ப. பொன்னுரங்கம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் மூளைக்காய்ச்சல் நோயினால் பல குழந்தைகள் இறந்துள்ளதால் அந்நோயைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.